(இ) இத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சுமார் 380 ஏக்கர் புதிய நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

THIRU K. KOTHANDERAMIAH : Sir Sulagiri area where it is proposed to do this work is a Zamindari area. Even in the Governor's address it has been stated that Government are taking steps to do such work in Zamindari areas. May I know from the Hon. Minister for Public Works and when the work will be completed?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் விரிவான ஆய்வில் இருக்கிறது. அங்கிருந்து சிபார்சு போர்டுக்கு வந்து, ரெவின்யூ போர்டில் இருந்து அரசுக்கு வந்தவுடன், அதனைப் பரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்கப்படும்.

கடம்பாகுளம் தலை மதகினை அகலப்படுத்தல்

*77 வின—**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதியிலுள்ள கடம்பாக்குளத்தின் தலை மதகினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம். அரசு ஆணை எண் 1399, பொதுப்பணித்துறை, நாள் 3—9—1973-ல் கடம்பாக்குளத்தின் பொறையூர் தலை மதகினில் மேலும் நான்கு புதிய கண்ணறைகள் (Vents) அமைக்க ரூ. 3.35 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வேலை வரும் ஏப்ரல் திங்களில் அதாவது பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர் நிறுத்தப்படும் காலத்தில், ஆரம்பிக்கப்படும்.

பொதுப் பணித்துறை இளநிலைப் பொறியாளர்களது பணிகள்

*78 வின—**திரு. மே. சி. தூாமணி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைத் துறை முதலியவற்றில் 500-க்கும் மேற்பட்ட இளம் பொறியாளர்களது பணி வரன் முறைபடுத்தப்படாமல் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) தற்சமயம் நெடுஞ்சாலைத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் மொத்தம் 95 பேர் தற்காலிக இளநிலைப் பொறியாளர்களாக 1970-ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார்கள். தமிழ்நாடு பொதுப் பணிக் கழகம் இவர்களைத் தேர்ந்தெடுத்த பின்னால் தான் இவர்களின் பணி முறைப்படுத்தப்படும். இதுவரை இவ்விரு துறைகளிலும், 272 இளநிலைப் பொறியாளர்களின் பணி முறைப்படுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலர் மாநாடு

*79 வினா—திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து யூனியன், போர்டு இவைகளில் பணிபுரியும் அலுவலர்கள் மாநாடு 1972 டிசம்பர் மாதத்தில் கூடி அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் அனுப்பி உள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அக் கோரிக்கைகளின் பேரில் அரசாங்கம் தற்சமயம்வரை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ? அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அம் மாநாட்டின் 70 தீர்மானங்கள் அடங்கிய முறையீடு 7—3—1973 அன்று அரசுக்கு வரப்பெற்றுள்ளது. அக் கோரிக்கைகளும் அவற்றின் மீது அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளையும் காட்டும் பட்டியல் * பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : அதிலுள்ள பெரும்பாலான கோரிக்கைகள் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருப்பதாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாக நிறைவேற்ற முடியவில்லை என்றும்

---

* 475–496 பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.